Crl.Misc.40.

**EXAMINATION OF THE ACCUSED**

(Section 274 of BNSS)

– – – – – – –

IN THE COURT OF

Calendar .. ..

Miscellaneous .. .. STC 1006 of 2023

Preliminary Register .. ..

STATEMENT OF ACCUSED

Name : தாமின் அன்சாரி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Date : 06.12.2025

<u>Questions</u> : இவ்வழக்கின் புகார்தாரர் நிர்மலா மற்றும் அவரது மகன் முனியசாமி நிர்வகிக்கும் தொழிற்சாலையில், எதிரியாகிய நீர் வாதியின் தீப்பட்டி தொழிற்சாலையில் 18.02.2023 ம் தேதியில் ரூ.2,67,155/–ற்க்கும் மற்றும் 23.03.2023 ம் தேதியில் ரூ.3,52,167/– ற்க்கும் (மொத்தம் ரூ.6,19,332/), தீப்பட்டி வாங்கியதாவும், அதில் ரூ.2,17,155/– த்தை பல தவனைகளில் பணமாகவும், வங்கி மூலமாகவும் செலுத்தி, பாக்கி தொகை ரூ.4,02,167/– செலுத்த வேண்டும் என்றும், வாதி பல முறை பணத்தை கேட்டதற்கு காலம் தாழ்த்தியதாகவும், எதிரியாகிய நீர் வாதியின் மகன் முனியசாமி மீது மதுரை, கூடல் புதுர் காவல் நிலையத்தில் பொய் புகார் ஒன்று கொடுத்துதாகவும், விசாரணையில் தாங்கள் கொடுக்க வேண்டிய பணம் ரூ.4,02,167/– 05.08.2023 ம் தேதிக்குள் செலுத்தி விடுவதாக கூறி, பணத்தை செலுத்தாததால், வாதியின் மகன் முனியசாமி 10.08.2023 ம் தேதி, உங்களின் இடத்திற்கு வந்து மேற்படி பாக்கி தொகையை கேட்டதற்கு, தாங்கள் 31.08.2023 ம் தேதியிட்ட ரூ.3,52,167/–ற்க்கான தங்களுடைய கரூர் வைசியா வங்கி, கொசகுளம் கிளை காசோலையை காசோலை எண்.000212 கொடுத்து, பாக்கி ரூ.50,000/–த்தை 2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் தருவதாக கூறியதாவும், தங்களுடைய காசோலையை வாதி அவர் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் வசூலுக்காக 31.08.2023 ம் செலுத்திய

போது, 01.09.2023 ம் தேதி வங்கி கணக்கில் Payment Stopped by the drawer என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும், முனியசாமி, உங்களை தொடர்பு கொண்ட போது, நீங்கள் பதில் அளிக்காமல் இருந்ததால், 09.09.2023 ம் தேதி எதிரியாகிய உங்களுக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை வாங்க மறுத்து திருப்பி அனுப்பியதாகவும், இது நாள் வரை பணம் தரவில்லை என்பதால் புகார்தாரர் உம்மீது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளாரே, அது பற்றி நீர் கூறும் முகாந்திரம் என்ன? நீர் என்ன குற்றவாளியா? இல்லையா? நீர் என்ன சொல்கிறீர்?

Answers : RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் நான் கிடையாது, அதன் உரிமையாளர் முகமது ரிபாக் என்பவர் ஆவார். நான் அந்த நிறுவனத்தில் மார்க்கெட்டிங் செய்து வந்தேன். வாதி நிறுவனத்தில் இருந்து கடனுக்காக தீப்பெட்டி வாங்கும்போது எங்களுடைய நிறுவனத்தில் இருந்து பிணையத்திற்காக காசோலை கொடுப்பது வழக்கமாகும். நாங்கள் பணத்தை கொடுத்த பிறகு காசோலையை திருப்பி கொடுத்துவிடுவார்கள். ஆனால், எங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுக்க வேண்டிய பணம் முழுவதையும் கொடுத்து முடித்த பிறகும் பிணையமாக கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளார்கள். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்னுடைய வங்கி கணக்கிலிருந்து கொடுக்கப்பட்ட காசோலை இல்லை. அது RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளரான முகமது ரிபாக் என்பவரின் கையொப்பம் செய்து கொடுக்கப்பட்ட காசோலை ஆகும். ஆகையால், இந்த வழக்கை என் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளார்கள்.

மேற்படி கேள்வி என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.